| | | |
|---|---|---|
| சாட்சி : PW1 ராஜா | அ.வ.எண். 233/2022 | 15.04.2024 |

குறுக்கு விசாரணை

பிரதிவாதிகள் எனக்கு உறவினரா என்றால் இல்லை. எனது இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளதால் நான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். ஆக்கிரமிப்பு செய்துள்ளதை பொருத்து வழக்கறிஞர் ஆணையரை நியமனம் செய்ய நடவடிக்கை எடுத்தேனா என்றால் எடுத்துள்ளேன். எனது வழக்கை நிரூபணம் செய்வதற்கு ஆதரவாக ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது இல்லை. பிரதிவாதி ஏற்கனவே தாக்கல் செய்த வழக்கு தள்ளுபடியாகிவிட்டது என்பதால் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. பிரதிவாதி அ.வ.எண்.213/2000ம் வழக்கு தாக்கல் செய்த போது ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக தெரிந்து கொண்டேன். ஆக்கிரமிப்பு அளவு குறித்து ஆவணங்கள் வைத்துள்ளேன். ஆக்கிரமிப்பு பொருத்து ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றும், என் கை வசம் இல்லை என்றும், நான் வழக்கிற்காக பொய்யாக இருப்பதாக சொல்கிறேன் என்று பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சர்வேயர் வழக்கு சொத்தை அளந்தார். சர்வேயர் அளந்ததற்கான ஆவணங்கள் எதுவும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் எனது வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். எனக்கு எழுத, படிக்க தெரியாது. நான் தாக்கல் செய்துள்ள வழக்குரையில் என்ன விவரங்கள் உள்ளது என்று நான் கேட்டு தெரிந்து கொள்ளவில்லை. எனது வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் இடையில் சுவரே இல்லை. எனது வீட்டிற்கும், பிரதிவாதி வீட்டிற்கும் இடையில் அத்து இல்லை.

வழக்கு சொத்து எனக்கு பூர்வீகமானது. அதற்கு ஆவணம் எதுவும் இல்லை. எனது அப்பா இருந்த காலத்திலிருந்து பாத்தியப்பட்டது. அதற்கு ஆதரவாக பட்டா உள்ளது. அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து பூர்வீக சொத்து என்பதை காட்டுவதற்கு என்னிடம் ஆவணங்கள் இல்லை என்றும், இருந்திருந்தால் அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றால் சரியல்ல. நான் இந்த வழக்கை தாக்கல் செய்வதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்றும், காலம் கடந்து வழக்கு தாக்கல் செய்துள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. வழக்கு சொத்து சம்மந்தமான அளவுகளையும், ஆக்கிரமிப்பு சம்மந்தமான அளவுகள் குறித்தும் முரணான தகவல்கள் சொல்லியுள்ளதால் எனது வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. பிரதிவாதி எந்த இடத்தையும் ஆக்கிரமிப்பு செய்யவில்லை என்றால் சரியல்ல. ஆக்கிரமிப்பு செய்துள்ளார். வழக்கை தாக்கல் செய்ய 01.03.2022 ம் தேதியன்று எனக்கு எந்த வழக்கு மூலமும் எழவில்லை என்றால் சரியல்ல. 01.03.2022 ம் தேதி நான் காவல் நிலையத்தில் புகார் எதுவும் கொடுத்தேனா என்றால் கொடுத்தேன். ஆனால் நடவடிக்கை எதுவும் எடுக்கவில்லை. வழக்கு தாக்கல் செய்து நிலுவையில் உள்ள போதே சர்வேயரை வைத்து அளந்தேனா என்றால் அதற்கு முன்பே அளந்தேன். நான் சொல்வது போல் சர்வேயர் வைத்து அளக்கவில்லை என்றும், வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. நான் பிரதிவாதிக்கு எதிராக சொல்லியுள்ள குற்றச்சாட்டிற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யாத காரணத்தினால் வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல.